தமிழ்நாடு முழுவதும் தினசரி பிரிண்ட் ஆகி வெளிவரும்
தினதமிழ்
நாளிதழுக்கு சேலம், கரூர், திருநெல்வேலி, விழுப்புரம், கடலூர், திருச்சி ஆகிய மாவட்டங்களுக்கு மாவட்டம் மற்றும் தாலுகா நிருபர்கள் தேவை. தொடர்புக்கு
9994466200–9080728304

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

# தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்
DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936
மாற்றத்தின் ஆரம்பம்
dhinatamil.tn@gmail.com • www.dhinatamil.com • dhinatamil

.நாகர்கோவில் பதிப்பு . 22.12.2025 . மலர் 03 . இதழ் 352. திங்கள்கிழமை dhinatamil . NAGERCOIL EDITION . 22.12.2025 . VOL 03 . ISSUE 352. MONDAY . 4 PAGES . Rs. 5

உங்கள் அபிமான தின தமிழ் செய்திகளை Whatsapp - ல் பின் தொடர

## டெல்லி படையெடுப்புக்கு அஞ்சமாட்டோம்

# வெற்றிகிட்டும் வரை கவனம் சிதற கூடாது!

## மாவட்ட செயலாளர்களுக்கு முதல்வர் ஸ்டாலின் கட்டளை !!

சென்னை, டிச.22-

வெற்றியை எட்டும் வரைக்கும் கவனம் சிதறாமல் உழையுங்கள். டெல்லி படையெடுப்புக்கு தமிழ்நாடு ஒருபோதும் அஞ்சாது என்று முதல்வர் ஸ்டாலின் கூறினார்.

திமுக தலைவரும், முதல்-அமைச்சருமான மு.க.ஸ்டாலின் தலைமையில் திமுக மாவட்ட செயலாளர்கள் கூட்டம் காணொலி காட்சி வாயிலாக நடைபெற்றது. இந்த கூட்டத்தில் உரையாற்றிய முதல்-அமைச்சர் மு.க.ஸ்டாலின் கூறியதாவது:- எஸ்.ஐ.ஆர். நடைமுறையை திறம்பட எதிர்கொண்டு செயலாற்றிக்கொண்டிருக்கும் கழகத்தின் போர்ப்படை தளபதிகளான எல்லாருக்கும் பாராட்டுகள். தமிழ்நாட்டின் 15 சதவீத வாக்காளர்களை, அதாவது 97 லட்சம் வாக்காளர்களை நீக்கி, வரைவு வாக்காளர் பட்டியலை வெளியிட்டுள்ளார்கள். இடம் பெயர்ந்தவர்கள் என்று மட்டும் சுமார் 66 லட்சம் பேரை நீக்கியிருக்கிறார்கள்.எஸ்.ஐ.ஆர். பணிகளை அவசரகதியில் ஆரம்பித்தபோதே இது, பல்வேறு முறைகேடுகளுக்கு வழிவகுக்கும்; தகுதியான தமிழ்நாட்டு வாக்காளர்கள் நீக்கப்பட வாய்ப்புள்ளது என முன்கூட்டியே எச்சரித்தோம். சுப்ரீம் கோர்ட்டிலும் வழக்கு தொடுத்திருக்கிறோம்.மாநில, மாவட்ட நிர்வாகிகள் தொடங்கி, தொகுதிப் பார்வையாளர்கள், கிளைக் கழக நிர்வாகிகள் என ஒவ்வொரு உடன்பிறப்பும், பம்பரமாக உழைத்தீர்கள். அ.தி.மு.க.வும் பா.ஜ.க.வும் களத்துக்கே வரவில்லை. துரும்பை கூட கிள்ளி போடவில்லை. அதனால்தான், நாம் சந்தேகப்பட வேண்டியதாக உள்ளது. எனவே, நீக்கப்பட்ட 97 லட்சம் வாக்காளர்களில் நம் வாக்காளர்கள் இருக்கிறார்களா என கவனமாக பார்க்க வேண்டும். 168 தொகுதிகளில் 10 சதவீதத்திற்கும் அதிகமான வாக்காளர்கள் நீக்கப்பட்டுள்ளார்கள். இதை நாம் வாக்குச்சாவடி வாரியாக பார்க்க வேண்டும். ஒருவர் தவறுதலாக விடுபட்டு இருந்தால் கூட படிவம் - 6 நிரப்பிக் கொடுத்து வாக்காளர் பட்டியலில் இணைக்க வேண்டும்.ஒவ்வொரு வாக்குச்சாவடியிலும் நீக்கப்பட்டவர்கள் பட்டியலில் யாரெல்லாம் 'ஓரணியில் தமிழ்நாடு' உறுப்பினர்கள் என்ற விவரம் நாளைக்குள் மாவட்டச் செயலாளர்களுக்கு அனுப்பி வைக்கப்படும். விவரங்களை முழுமையாக சரிபார்த்து விடுபடல் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும். அடுத்ததாக புதிய வாக்காளர்கள் இணைக்கப்படுவதையும் தொடர்ந்து கவனிக்க வேண்டும். போலிகள் இல்லாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.தமிழ்நாடு முழுக்க இருந்த வாக்குச்சாவடிகளில் எண்ணிக்கை, 68,467-ல் இருந்து,75,032 ஆக உயர்ந்திருக்கிறது. புதிதாக உருவாக்கப்பட்டிருக்கும் வாக்குச்சாவடிகள் அனைத்துக்கும் புதிய BLA&2 மற்றும் BLC பொறுப்பாளர்களை நியமிக்க வேண்டும். நம்மை நேர்வழியில் வீழ்த்த முடியாத பாசிச சக்திகளும், எதிரிகளும் குறுக்கு வழியில் காரியம் சாதிக்க நினைப்பார்கள். அதற்கு நாம் கடுகளவுகூட இடம் தரக்கூடாது.நம் கவனத்தை திசைதிருப்பவும், நம்முடைய உழைப்பை வீணாக்கவும் எதிரிகள் கூட்டமும், வீணர்கள் கூட்டமும் முயற்சி செய்வார்கள். அதையெல்லாம் புறந்தள்ளி, தேர்தல் பணி ஆற்றுங்கள். வெற்றிக் கோட்டை நெருங்கும் நேரத்தில், பதற்றமோ, அசதியோ கூடாது. இனிமேதான் நம் முழு பலத்தையும் கொடுத்து ஓட வேண்டும். களத்தில் நாம்தான் வலிமையாக உள்ளோம். நம் கூட்டணிதான் வெற்றிக் கூட்டணி. வெற்றியை எட்டும் வரைக்கும் கவனம் சிதறாமல் உழையுங்கள். டெல்லி படையெடுப்புக்கு தமிழ்நாடு ஒருபோதும் அஞ்சாது! தமிழ்நாடு போராடும்! தமிழ்நாடே வெல்லும்! இவ்வாறு அவர் கூறினார்."

# நெல்லையில் காயிதே மில்லத் பெயரில் ரூ.100 கோடியில் பிரமாண்ட நூலகம்




திருநெல்வேலி, டிச.22-

திருநெல்வேலியில் காயிதே மில்லத் பெயரில் ரூ. 100 கோடி மதிப்பீட்டில் பிரமாண்ட நூலகம் அமைய இருப்பதாகவும், அதற்கான அடிக்கலை இன்றைக்கு நாட்டியிருப்பதாகவும் முதல்வர் மு.க. ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

திருநெல்வேலி மாவட்டம், பாளையங்கோட்டை அரசு மருத்துவக் கல்லூரி மைதானத்தில் நடைபெற்ற அரசு விழாவில், முடிவுற்ற பணிகளை திறந்து வைத்து, புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, பல்வேறு துறைகளின் சார்பில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை முதல்வர் மு.க. ஸ்டாலின் வழங்கினார். இதனைத் தொடர்ந்து அவர் ஆற்றிய உரை:

நெல்லையின் அடையாளமாக விளங்குகிறது நெல்லையப்பர் கோயில். ஏழாம் நூற்றாண்டில், நின்றுசீர் நெடுமாறப் பாண்டியரால் கட்டப்பட்ட இந்த கோயிலை 700 ஆண்டுகளுக்குப் பிறகு புதுப்பித்து திருப்பணிகளை செய்தவர் கருணாநிதி. நெல்லையப்பர் கோயிலின் வெள்ளித் தேர் 1991-ல் தீ விபத்தில் எரிந்து போனது. கடந்த பிப்ரவரி மாதம், நான் இதே நெல்லைக்கு வந்த போது மீண்டும் அந்த வெள்ளித் தேர் ஓடும் என்று அறிவித்தேன். மகிழ்ச்சியோடு சொல்கிறேன், இப்போது அதற்கான பணிகள் அனைத்தும் முடிவடைந்துவிட்டன. இன்னும் சில நாட்களில், அதாவது ஜனவரி மாதம் முதல் வாரத்திலிருந்து அந்த வெள்ளித் தேர் ஓடும் என்று மகிழ்ச்சியோடு நான் தெரிவித்துக் கொள்ள விரும்புகிறேன்.

தமிழர்களான நம்முடைய பண்பாடு தனித்துவமானது, முற்போக்கானது! இந்தியத் துணைக்கண்டத்தின் நாகரிகத்தின் தொட்டிலாகவும், உச்சமாகவும் இருந்தது, நம்முடைய தமிழ்நிலம்தான்! அதற்கு பல இலக்கியச் சான்றுகள் இருக்கிறது! ஆனால், இலக்கியம் மட்டுமே ஒருபோதும் வரலாற்று சான்றாகாது! எனவே, அதை அறிவியல் ரீதியாக மெய்ப்பிக்கவும், தொல்லியல் சான்றுகளை சேகரிக்கவும் நாம் மேற்கொள்ளும் காலப் பயணம்தான் அகழாய்வுகள்!

13 ஏக்கர் நிலப்பரப்பில், 54 ஆயிரத்து 296 சதுர அடி பரப்பளவில், பொருநை அருங்காட்சி அரங்கத்தை நான் திறந்து வைத்திருக்கிறேன்! உங்களை எல்லாம் நான் கேட்க விரும்புவது, நீங்கள் எல்லோரும் குடும்பத்துடன் சென்று, இந்த அருங்காட்சியகங்களை பார்க்க வேண்டும்!

இந்த நேரத்தில், மற்றொரு விஷயத்தை நான் குறிப்பிட்டாக வேண்டும். கடந்த 2021-ஆம் ஆண்டு ஒன்றிய பட்ஜெட்டில் ஆதிச்சநல்லூர் அருங்காட்சியகம் அமைப்பதற்கு அறிவிப்பு வந்தது. அந்தப் பணிகள் இப்போது எந்த நிலையில் இருக்கிறது? இன்னும் அதற்கான பணிகள் எதுவும் தொடங்கவில்லை.

ஆனால், நாம் ஆட்சிக்குப் பொறுப்பிற்கு வந்த பிறகு தமிழ்நாடு தொல்லியல் துறை சார்பில், சிவகலை உள்ளிட் அகழாய்வுகளை மேற்கொண்டு இப்போது உலகமே திரும்பிப் பார்க்கக்கூடிய அளவிற்கு பொருநை அருங்காட்சியகத்தை உருவாக்கி இருக்கிறோம். அதனால், இந்த நேரத்தில் பிரதமர் மோடியையும், நிதியமைச்சர் நிர்மலா சீதாராமனையும் தமிழ்நாட்டில் கட்டியிருக்கக்கூடிய கீழடி அருங்காட்சியகத்திற்கு வந்து பார்க்கவேண்டும் என்று இந்த கூட்டத்தின் மூலமாக, நான் அன்போடு அவர்களை அழைக்கிறேன். நீங்கள் வந்து பார்த்தால்தான் தமிழினுடைய நாகரிகம் எந்த அளவுக்கு தொன்மை கொண்டிருக்கிறது என்பது தெரியும்.

இன்றைய தினம் 235 கோடியே 94 இலட்சம் ரூபாய் மதிப்பிலான 33 முடிவுற்ற பணிகளை நெல்லை மாவட்ட மக்களுக்காக நான் திறந்து வைத்திருக்கிறேன்! அதில், குறிப்பிட்டுச் சொல்ல வேண்டும் என்றால், நெல்லை பன்னோக்கு மருத்துவமனையில், இதயம், நரம்பு, சீறுநீரகம், கல்லீரல் குறைபாடு உள்ளவர்களுக்கு சிகிச்சை வழங்க தேவையான அனைத்து நவீன கட்டமைப்புகளையும் கொண்ட மருத்துவமனை கட்டடம் முக்கியமாக இருக்கிறது!

தமிழ்ப் பெருமைக்கு பொருநை மியூசியம்! மக்கள் உயிர்காக்க மருத்துவமனை! "அப்போது நெல்லை மக்களுக்கு அறிவுப் பசிக்கு என்ன?" என்று கேட்கிறீர்களா! சென்னையில் அண்ணா நூற்றாண்டு நூலகம், மதுரையில் கலைஞர் நூற்றாண்டு நூலகம், கோவையில் தந்தை பெரியார் நூலகம் மற்றும் அறிவியல் மையம், திருச்சியில் பெருந்தலைவர் காமராசர் நூலகம் எனும் வரிசையில், நெல்லையில் காயிதே மில்லத் பெயரில், 100 கோடி ரூபாய் மதிப்பீட்டில் பிரமாண்ட நூலகம் அமைய இருக்கிறது. அதற்கான அடிக்கலை இன்றைக்கு நாட்டியிருக்கிறேன்.

நெல்லையின் அடையாளமாக நெல்லையப்பர் கோயில், திருவள்ளுவர் இரட்டைப் பாலம், தாமிரபரணி - இந்த வரிசையில் இனி, பொருநை அருங்காட்சியகமும், மாபெரும் அறிவுத் திருக்கோயிலாக அமையப் போகின்ற காயேதே மில்லத் நூலகமும் இருக்கும்! நெல்லைக்கு மட்டுமல்ல, அருகாமையில் இருக்கக்கூடிய தென்காசி, தூத்துக்குடி, கன்னியாகுமரி உள்ளிட்ட தென் மாவட்டங்களைச் சேர்ந்த மாணவர்கள், இளைஞர்கள் இதனால் பெரிய அளவில் பயனடைவார்கள்!

மொத்தம் 356 கோடியே 59 இலட்சம் ரூபாய் மதிப்பில், புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டி இருக்கிறேன். 45 ஆயிரத்து 477 பயனாளிகளுக்கு 101 கோடியே 49 இலட்சம் ரூபாய்க்கு நலத்திட்ட உதவிகளையும் வழங்கி இருக்கிறேன்.

16 ஆண்டுகளுக்கு முன்பே, அப்போதைய முதல்வர் கருணாநிதி, தாமிரபரணி ஆற்றின் வெள்ள உபரி நீரை வறண்ட பகுதிகளுக்குக் கொண்டு செல்ல, 369 கோடி ரூபாய் ஒதுக்கி தாமிரபரணி, கருமேனியாறு மற்றும் நம்பியாறு வெள்ள உபரி நீர்த் திட்டத்தைத் துவக்கி வைத்தார்.

2021-ல் நம்முடைய திராவிட மாடல் ஆட்சி பொறுப்பேற்றவுடன் இதற்காக தனியாக அலுவலர்களை நியமித்து விரைந்து முடிக்க நான் உத்தரவிட்டேன்! தமிழ்நாட்டின் முதல் நதிநீர் இணைப்புத் திட்டமாக, வெற்றிகரமாக இது முடிக்கப்பட்டு, கடந்த பிப்ரவரி மாதம் திறந்து வைக்கப்பட்டது!. இதனால், திருநெல்வேலி மாவட்டத்தில், 14 ஆயிரத்து 85 ஹெக்டேரும், தூத்துக்குடி மாவட்டத்தில் 8 ஆயிரத்து 955 ஹெக்டேரும் என்று மொத்தம், 23 ஆயிரத்து 40 ஹெக்டேர் நிலங்கள் பாசன வசதி பெற்றது. அதேபோல், பாளையங்கோட்டை, நாங்குநேரி, இராதாபுரம், திருவைகுண்டம், திருச்செந்தூர் ஆகிய சட்டமன்றத் தொகுதிகளில் இருக்கின்ற வறண்ட பகுதிகளில், இதனால் நிலத்தடி நீர்மட்டம் உயரத் தொடங்கியிருக்கிறது, வேளாண்மைப் பணிகள் பெருகியிருக்கிறது!

நெல்லைக்கான சில அறிவிப்புகளை தற்போது வெளியிடுகிறேன். முதல் அறிவிப்பு ஸ்ரீ திருநெல்வேலி மாநகர், காந்திநகரில் அமைந்திருக்கக்கூடிய ராணி அண்ணா அரசு மகளிர் கல்லூரியில், 16 கோடி ரூபாய் செலவில், அனைத்து வசதிகளுடன் புதிய மகளிர் தங்கும் விடுதி அமைக்கப்படும்.

இரண்டாவது அறிவிப்பு ஸ்ரீ சேரன்மாதேவி வட்டம் முக்கூடல், பாப்பாக்குடி கிராம விவசாயிகள் பயன்பெறக்கூடிய வகையில், காங்கேயன் கால்வாய் மற்றும் வெள்ளோடையை மேம்படுத்தும் பணிகள் 4 கோடியே 1 இலட்சம் ரூபாய் மதிப்பீட்டில் மேற்கொள்ளப்படும்.

மூன்றாவது அறிவிப்பு ஸ்ரீ நாங்குநேரி மற்றும் இராதாபுரம் வட்ட விவசாயிகளின் கோரிக்கையை ஏற்று, 5 கோடி ரூபாய் செலவில், வள்ளியூர் பெரிய குளம் மற்றும் வள்ளியூரான் கால்வாய் ஆகியவை புனரமைக்கப்படும் என்று மகிழ்ச்சியோடு தெரிவித்துக் கொள்கிறேன்.

இப்படி மக்களுக்குத் தேவையானதை பார்த்துப் பார்த்து செய்து வழங்குகின்ற மக்களாட்சியை நாம் நடத்திக் கொண்டிருக்கிறோம். இதற்கு அப்படியே நேர்மாறாக, மக்கள் விரோத ஆட்சியை ஒன்றிய அரசு இன்றைக்கு நடத்திக் கொண்டிருக்கிறது. இந்திய கிராமப்புறங்களின் உயிர்நாடியாக இருந்து, பல கோடி ஏழை மக்களின் வறுமையை போக்கிய மகாத்மா காந்தி நூறு நாள் வேலைத் திட்டத்தை இப்போது, பா.ஜ.க. அரசு திட்டமிட்டு முடக்கியிருக்கிறார்கள்.

மகாத்மா காந்தியடிகள் பெயரையே நீக்கி, பெரும்பாலான இந்திய மக்களுக்கு புரியாத இந்திப் பெயரை வைத்திருக்கிறார்கள். காந்தியின் பெயரை நீக்கியது மட்டுமல்ல, 100 நாள் வேலை திட்டத்தின் உண்மையான நோக்கத்தையே காலி செய்துவிட்டார்கள் அழித்துவிட்டார்கள் - அழிக்கிறார்கள்.

இந்த நிலையில், வருகின்ற 24-ஆம் தேதி நூறு நாள் வேலைத்திட்டத்தை நிறுத்தியதற்கு எதிராக, நம்முடைய திராவிட முன்னேற்றக் கழகத்தின் தலைமையில் அமைந்திருக்கக்கூடிய மதச்சார்பற்ற கூட்டணியின் சார்பில், தமிழகம் முழுவதும் ஒன்றிய அரசிற்கு எதிராக நாம் ஒரு மிகப் பெரிய ஆர்ப்பாட்டத்தை நடத்தவேண்டும் என்று அறிவித்திருக்கிறோம்.

கலைஞர் மகளிர் உரிமைத் தொகையை இது வரை 1 கோடியே 13 இலட்சம் சகோதரிகளுக்கு வழங்கிக் கொண்டிருந்தோம். இந்த மாதத்தில் இருந்து கூடுதலாக 16 இலட்சம் பேருக்கு அதிகமாக மாதம் ஆயிரம் ரூபாய் வழங்குகிறோம். இவ்வாறு முதல்வர் ஸ்டாலின் பேசினார்.

இந்நிகழ்ச்சியில், அமைச்சர்கள் கே.என்.நேரு, எ.வ.வேலு, கே.கே.எஸ்.எஸ்.ஆர். ராமச்சந்திரன், தங்கம் தென்னரசு, கனிமொழி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

## வீடு புகுந்து பைக் எரிப்பு வாலிபருக்கு போலீஸ் வலை



இரணியல், டிச.22–

இரணியல் அருகே வீடு புகுந்து பைக்கை எரித்த வாலிபரை போலீசார் வலை வீசி தேடி வருகின்றனர். திருட்டு, தீ எரிப்பு, கொலை மிரட்டல், பைக் எரிப்பு என சம்பவங்கள் நடந்து வருவதால் தங்கள் உயிருக்கு பாதுகாப்பு இல்லை என பெண் கதறிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

குருந்தன்கோடு அடுத்த வர்த்தகநாடார்குடியிருப்பு பகுதியை சேர்ந்தவர் கிறிஸ்டல் மல்லிகா (43). இவரது கணவர் கடந்த சில ஆண்டுகளுக்கு முன்பு இறந்துவிட்டார். இவருக்கு இன்ஜினியரிங் கல்லூரி 2ம் ஆண்டு படிக்கும் மகனும், 9ம் வகுப்பு படிக்கும் ஒரு மகளும் உள்ளனர். மல்லிகாவுக்கும் இவரது உறவினர் சிபின் (24) என்பவருக்கும் குடும்ப சொத்து சம்பந்தமாக முன் விரோதம் இருந்து வருவதாக கூறப்படுகிறது.

இந்த நிலையில் கடந்த அக்டோபர் மாதம் 10ம் தேதி இரவு கிறிஸ்டல் மல்லிகா வீட்டில் இல்லாததை அறிந்த மர்ம நபர் கதவை உடைத்து உள்ளே நுழைந்துள்ளார். அங்கிருந்த பீரோவை திறந்து 3 பவுன் தங்க நகை, ரூ. 50 ஆயிரம் ரொக்கப் பணம், பித்தளை குடம், பித்தளை குட்டுவம் மற்றும் பயன் படுத்தி இருந்த பத்திரங்களையும் திருடி சென்ற சம்பவம் நடந்திருந்தது. நவம்பர் 6ம் தேதி மல்லிகா குடும்ப விசேஷ நிகழ்ச்சிக்கு சென்றிருந்தார். அப்போது இரவு வீட்டு காம்பவுன்டிற்குள் அத்துமீறி நுழைந்த மர்ம நபர் வீட்டின் சுவர், ஜன்னல் கதவு மற்றும் மின் மீட்டர்களில் பெட்ரோல் ஊற்றி தீ வைத்து எரித்திருந்த சம்பவம் நடந்திருந்தது.

இந்த சம்பவத்திற்கு சிபின் தான் காரணம் என கிறிஸ்டல் மல்லிகா இரணியல் காவல் நிலையத்தில் புகார் அளித்திருந்தார். புகாரின் பேரில் இரணியல் போலீசார் சிபின் மீது வழக்குப் பதிவு செய்து அவரை தேடி வந்தனர். போலீசார் தேடுவதை அறிந்த சிபின் கேரளாவுக்கு தப்பி சென்று விட்டார். அங்கிருந்து இன்ஸ்டாகிராம் மூலமாக கிறிஸ்டல் மல்லிகாவின் உறவினர் ஒருவருக்கு வாய்ஸ் மெசேஜ் அனுப்பி அனைவரையும் கொலை செய்து விடுவதாக கொலை மிரட்டல் விடுத்திருந்தார். இது குறித்தும் கிறிஸ்டல் மல்லிகா இரணியல் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் விசாரணை நடத்தி வந்தனர்.

இந்த நிலையில் நேற்று இரவு கிறிஸ்டல் மல்லிகா தனது மகன் மகளுடன் வீட்டில் தூங்கிக் கொண்டிருந்தார். அதிகாலை சுமார் 1 மணி அளவில் வீட்டின் முன்பு நிறுத்தி இருந்த பைக் தீ பிடித்துள்ளது. மள மளவென தீ பரவியதால் வெளிச்சத்தில் மல்லிகா எழும்பி பார்த்துள்ளார். உடனடியாக அவர் தனது மகனுடன் சேர்ந்து தண்ணீரை ஊற்றி தீயை அணைத்துள்ளனர். அதற்குள் பைக் தீ பிடித்து முழுவதும் எரிந்து நாசமாகி விட்டது. இதுகுறித்து கிறிஸ்டல் மல்லிகா செல்போன் மூலம் இரணியல் காவல் நிலையத்திற்கு தகவல் தெரிவித்துள்ளார். உடனடியாக சம்பவ இடம் வந்த போலீசார் அங்கு நடந்த சம்பவங்கள் குறித்து கேட்டு அறிந்து விசாரணை நடத்தினர். சிபினை கைது செய்ய அனைத்து நடவடிக்கையும் எடுப்பதாக கூறி சென்றுள்ளனர்.

இது குறித்து கிறிஸ்டல் மல்லிகா கூறும் போது: சொத்து பிரச்சினை சம்பந்தமாக சிபின் என்பவர் கடந்த சில மாதங்களாக எங்களுக்கு பல்வேறு வகைகளில் தொந்தரவுகளை செய்து வருகிறார். இது குறித்து இரணியல் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளோம். ஆனால் போலீசார் அவரை கைது செய்ய எந்த நடவடிக்கையும் எடுத்ததாக தெரியவில்லை. ஏற்கனவே எங்களை கொலை செய்து விடுவதாக சிபின் மிரட்டி வருகிறார். இந்த நிலையில் தான் இன்று அதிகாலை இந்த சம்பவம் நடந்துள்ளது. பைக்குக்கு பெட்ரோல் ஊற்றி தீ வைத்த சிபின் எங்கள் வீட்டிற்குள் பெட்ரோலை ஊற்றி தீ வைத்திருந்தால் நாங்கள் 3 பேரும் இன்று சமாதி ஆகி இருப்போம். இதனால் எங்கள் உயிருக்கும் உடமைக்கும் பாதுகாப்பும் இல்லாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே போலீசார் சிபினை கைது செய்து கடும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கண்ணீர் மல்க கூறினார். வீட்டின் முன்பு நிறுத்தி இருந்த பைக் பெட்ரோல் ஊற்றி தீ வைக்கப்பட்ட சம்பவம் அந்த பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## குமரியில் ஷேர்சாட் மூலம் பழகி இளம் பெண்ணின் ஆபாச வீடியோ பரப்பிய மதுரை வாலிபர் கைது!



நாகர்கோவில், டிச.22-

குலசேகரம் அருகே பொன்மனைப் பகுதியை சேர்ந்த இளம் பெண் ஒருவர் ஷேர்சாட் என்ற செயலி மூலம் அதிக நண்பர்கள் தோழியுடன் பழகி உள்ளார். அந்த வகையில் மதுரை மாவட்டம் அய்யங்கோட்டை அம்பேத்கர் தெருவை சேர்ந்த பெரியசாமி என்பவரின் மகன் அஜித்குமார் (23) என்பருடன் ஷேர்சேட் மூலம் அறிமுகம் கிடைத்துள்ளது. பின்னர் இளம் பெண்ணும் அஜித்குமாரும் நெருங்கியவர்களாக பழகினர். இதை பயன்படுத்தி இளம் பெண்ணை, வாலிபர் போட்டோ வீடியோக்கள் எடுத்துள்ளார். பின்னர் அதில் ஆபாச வீடியோ டேட்டாக்களாக மாற்றி சமூக வலைத்தளங்களில் பரப்பியுள்ளார். மேலும் இளம் பெண்ணின் குடும்பத்தையும் மிரட்டியதாக கூறப்படுகிறது.

இது குறித்து பாதிக்கப்பட்ட இளம்பெண் குமரி மாவட்ட எஸ்பி ஸ்டாலினிடம் புகார் அளித்தார். இது குறித்து சைபர் கிரைம் போலீசார் நடவடிக்கை எடுக்க எஸ் பி உத்தரவிட்டார். இதை அடுத்து ஏ டி எஸ் பி நாக சங்கர் தலைமையிலான சைபர் கிரைம் போலீசார் மற்றும் தனிப்படை தனிப்படை போலீசார் இது குறித்து விசாரித்து வழக்கு பதிவு செய்து அஜித்குமாரை கைது செய்தனர். பின்னர் அவர் நீதிமன்றத்தில் ஆஜர் படுத்தப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டார். அவர் மீது இளம்பண்ணுக்கு மிரட்டல், தகவல் தொழில்நுட்பத்தை தவறாக பயன்படுத்தியது உள்ளிட்ட 3 பிரிவுகளில் போலீசார் வழக்கு பதிவு செய்தனர்.

# கிருஷ்ணகிரி மாவட்டம் மகராஜா கடை அருகே கணக்கம்பட்டி சித்தர் பீடத்தில் உலக நன்மை வேண்டி கோ பூஜை!




கிருஷ்ணகிரி, டிசம்பர்.22-

கிருஷ்ணகிரி மாவட்டம் மகராஜா கடை அருகே அமைந்துள்ள நாகமரத்துபள்ளம் கணக்கம்பட்டி ஓம் ஸ்ரீ சற்குரு பழனிசுவாமிகள் சித்தர் பீடம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த சித்தர் பீடத்தில் மார்கழி மாத அமாவாசையை முன்னிட்டு சிறப்பு பூஜைகள் மற்றும் அபிஷேகப் பூஜைகள் நடைப்பெற்றது.

இந்த பூஜையின் போது உலக நன்மை வேண்டியும், மக்கள் யாவரும் பசி பட்டினி இன்றி நலமுடன் வாழ வேண்டியும், நடத்தப்பட்ட பூஜையில் சமுக நுகர்வோர் நல பாதுகாப்பு சங்கத்தின் மாநில பொதுச் செயலாளர் டாக்டர் சந்திரமோகன் கலந்துக் கொண்டு சித்தர் பீடத்தின் முன்பாக கோ பூஜனை மேற்கொண்டு, ஓம் ஸ்ரீ சற்குரு சித்தர் பீடத்திற்கு பால், இளநீர், பன்னீர் கொண்டு அபிஷேம் செய்தார். இதனைத் தொடர்ந்து கணக்கம்பட்டி பழனிசுவாமிக்கு மலர்களால் சிறப்பு அலங்காரம் செய்தும், தீபாராதனைகள் காண்பிக்கப்பட்டது. அப்போது உலக மக்கள் யாவரும் நலமாகவும், மழை பெய்து விவசாயம் செழித்திட வேண்டி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து ஏராளமான மக்கள் கலந்துக் கொண்டு வழிப்பட்டனர். இங்கு தினமும் மக்கள் வந்து வழிபட்டு சென்றாலும், அம்மாவாசை மற்றும் பௌர்ணமி நாட்களில் சிறப்பு பூஜைகளில் தமிழகம் மட்டுமின்றி ஆந்திர கர்நாடகா மாநிலத்திலிருந்து ஏராளமான பொதுமக்கள் இங்கு வந்து குழந்தை வரம் வேண்டியும், திருமணம் நடக்க வேண்டியும், சொத்து பிரச்சனை, குடும்ப பிரச்சனைகளில் இருந்து விடுபட மகாராஜாகடை கனகம்பட்டி பழனிசாமி சித்தர் பீடத்தை வழிபட்டு செல்கின்றனர்.

மேலும் இந்த சிறப்பு பூஜைகளுக்கான ஏற்பாடுகளை நாகமரத்துபள்ளம், கணக்கம்பட்டி ஓம் ஸ்ரீ சற்குரு பழனி சுவாமிகள் சித்தர் பீடம் சேவர்களான மாதேஷ், சவுந்தர், பொன்னுசாமி, திம்மராயன், ஆனந்தராஜ், அனந்தபொருமாள், விக்னேஷ், குமார், மணிகண்டன், வினோதினி லட்சுமி, சித்தர் கோவில் பூசாரி பால்ராஜ் ஆகியோர் சிறப்பாக செய்து இருந்தனர். சேவகர்களான மாதேஷ், சவுந்தர், பொன்னுசாமி, திம்மராயன், ஆனந்தராஜ், அனந்தபெருமாள், விக்னேஷ், குமார், மணிகண்டன், வினோதினி, லட்சுமி, சித்தர் பீட கோவில் பூசாரி பால்ராஜ் ஆகியோர் சிறப்பாக செய்து இருந்தனர். தொடந்து பக்தர்களுக்கு அன்னதானமும் வழங்கப்பட்டது.

# ஈரோடு சிட்டி பிரைசிங் சென்டரில் கிறிஸ்துமஸ் விழாவையொட்டி கலை நிகழ்ச்சிகள்




ஈரோடு, டிச. 22-

ஈரோடு சூரம்பட்டி நால் ரோடு சாத்தான் கருக்கு பகுதியில் சிட்டி பிரைசிங் சென்டர் என்ற இயேசுவின் நற்செய்தி ஐக்கியம் உள்ளது. இங்கு கிறிஸ்துமஸ் நற்செய்தி பெருவிழா பாதிரியார் துரை தலைமையில் நடந்தது.

இதை தொடர்ந்து ரான்பட் தலைமையில் தேவ செய்தி நடந்தது. பிறகு மாணவ மாணவிகளின் கலை நிகழ்ச்சிகள் நடந்தது. இறுதியில் அன்பின் விருந்து நிகழ்ச்சி நடந்தது. இதில் 800 க்கும் மேற்பட்டவர்கள் கலந்து கொண்டனர்.

# ரைட் 4 பாஸ் நிறுவனம் ஆராய்ச்சி மற்றும் வணிகத்தை விரிவுபடுத்த ₹14 கோடி நிதி திரட்டியது




சென்னை, டிச. 22-

கோயம்புத்தூரைச் சேர்ந்த உயர்தர செல்லப்பிராணி உணவு உற்பத்தி நிறுவனமான 'பெட் பிரகால்ப் இந்தியா நிறுவனம் , தனது தொழிற் சின்னம் 'ரைட்4பாஸ்' (ஸிவீரீலீமீ4றிஷீஷ்ஃ) -க்காக ரூ.14 கோடி நிதியைத் திரட்டியுள்ளது.

உயர் நிகர மதிப்பு கொண்ட தனிநபர் முதலீட்டாளர்கள் அடங்கிய குழுவிடமிருந்து, 'சீரிஸ் ஏ' சுற்றில் இந்த நிதி வெற்றிகரமாகத் திரட்டப்பட்டுள்ளதாக அந்நிறுவனம் அறிவித்துள்ளது.

இதுகுறித்து 'ரைட்4பாஸ்'(ஸிவீரீலீமீ4ஜீணீஷ்ஃ) - ன் நிறுவனரும், இயக்குநருமான தனு ராய், ஷமீர் அச்சன் ஆகியோர் கூறியதாவது:-

அறிவியல் மற்றும் இயற்கையான முறையிலான செல்லப்பிராணி உணவுத் தயாரிப்புகளை உருவாக்கி, இந்தியா முழுவதும் உள்ள செல்லப்பிராணி வளர்ப்பவர்களுக்கு, அந்தந்த உயிரினங்களுக்கு ஏற்ற உயர்தர உணவை எளிதாகக் கிடைக்கச் செய்வதே நிறுவனத்தின் நோக்கமாகும்.

செல்லப் பிராணிகளின் வயது மற்றும் உடல் செயல்பாட்டிற்கு ஏற்ற புதிய வகையான ஊட்டச்சத்து தயாரிப்புகளை அறிமுகப்படுத்தவும், இந்தியச் சந்தையில் தனது விநியோகத்தை விரிவுபடுத்தவும் இந்நிறுவனம் இலக்கு நிர்ணயித்துள்ளது. அதே வேளையில், சர்வதேச அளவில் ஏற்றுமதி செய்வதற்கான வலுவான அடித்தளத்தை அமைக்கவும் இந்த நிதி பயன்படுத்தப்பட உள்ளது.

இந்தியாவில் தற்போது 4 கோடிக்கும் அதிகமான வளர்ப்புப் பிராணிகள் உள்ளன. இந்தியாவின் மொத்த செல்லப்பிராணி உணவுச் சந்தை சுமார் ரூ.5,000 கோடி மதிப்புடையதாக உள்ளது. இச்சந்தை ஆண்டுக்கு சராசரியாக 20% வளர்ச்சியடைந்து வருகிறது.

மற்ற செல்லப்பிராணி உணவு நிறுவனங்களிலிருந்து 'ரைட்4பாஸ்' எதில் மாறுபடுகிறது என்றால், அதன் அடிப்படை தயாரிப்பு முறை மற்றும் அணுகுமுறையாகும். சந்தையில் உள்ள வழக்கமான பிராண்டுகள், அதிகப்படியான பதப்படுத்தப்பட்ட பொருட்கள், செயற்கை ரசாயனங்கள் மற்றும் பொதுவான தயாரிப்பு முறைகளை அதிகம் நம்பியுள்ளன. ஆனால், 'ரைட்4பாஸ்' அந்தந்த உயிரினங்களுக்கு ஏற்ற, முழுமையான இயற்கை உணவை அறிவியல் பூர்வமாக உருவாக்குவதில் கவனம் செலுத்துகிறது .

ரைட்4பாஸ்.(ஸிவீரீலீமீ4றிஷீஷ்ஃ) நிறுவனத்தைப் பொறுத்தவரை, அந்தந்த உயிரினங்களுக்கு ஏற்ற முழுமையான சத்துக்கள் நிறைந்த உணவின் நன்மைகளையும், நவீன காலத்திற்கேற்ற 'டிரை ஃபுட்' வசதியையும் நாங்கள் ஒன்றிணைக்கிறோம். எங்களின் தயாரிப்புகள் இங்கிலாந்தைச் சேர்ந்த கால்நடை ஊட்டச்சத்து நிபுணர்களால், அறிவியல் பூர்வமாக வடிவமைக்கப்பட்டவை. மேலும், இத்துறையில் நிபுணத்துவம் வாய்ந்த பணியாளர்களை நியமிக்கவும் நிறுவனம் முடிவு செய்துள்ளது . பல ஆண்டுகால ஆராய்ச்சிக்கு பிறகே இவை உருவாக்கப்பட்டுள்ளன. செல்லப்பிராணிகளின் செரிமான மண்டலத்திற்கு ஏற்ற வகையில், முழுமையான உணவுப் பொருட்களைக் கொண்டு இவை தயாரிக்கப்படுவதால், இதன் உடல் நலம் மேம்படுவதோடு, ஆயுட்காலமும் அதிகரிக்கின்றது என்றார்.

உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை
Whatsapp - ல்
பின் தொடர

# திருத்துறைப்பூண்டி பகுதியில் தொடர் கஞ்சா விற்பனையில் ஈடுபட்ட 2பேர் மீது குண்டர் சட்டம் பாய்ந்தது







திருத்துறைப்பூண்டி, டிசம்பர்.22-

திருவாரூர் மாவட்டம் திருத்துறைப்பூண்டி அருகே உள்ள பள்ளங்கோயில் கீழ தெருவை சேர்ந்த சந்திரசேகர் மகன் சந்தோஷ்குமார் (வயது23) இவரும், திருத்துறைப்பூண்டி கழுவமுளி தெருவை சேர்ந்த முருகேசன் மகன் ரூபன்ராஜ் (வயது-25)

இருவரும் சேர்ந்து பள்ளங்கோயில் கீழத்தெரு சுடுகாடு பகுதியில் கஞ்சா விற்பனையில் ஈடுபட்டதாக திருத்துறைப்பூண்டி போலீசாருக்கு ரகசிய தகவல் கிடைத்தது. ரகசிய தகவலின் அடிப்படையில் இன்ஸ்பெக்டர் கழனியப்பன், சப்-இன்ஸ்பெக்டர் யுவராஜ்

அந்த பகுதிக்கு சென்று கஞ்சா விற்பனையில் ஈடுபட்டிருந்த சந்தோஷ் குமார் மற்றும் ரூபன் ராஜ் இருவரையும் கடந்த 3.12.2025 அன்று கைது செய்து, அவர்கள் மீது கஞ்சா வழக்கு பதிவு செய்யப்பட்டு, நாகப்பட்டினம் கிளைச் சிறையில் அடைத்தனர். இந்த நிலையில் அவர்கள் மீது தொடர்ந்து பல்வேறு வழக்குகள் இருந்ததாலும், பல்வேறு குற்ற செயல்களில் ஈடுபட்டு வந்ததாலும், அவர்கள் மீது குண்டர் சட்டத்தில் வழக்கு பதிவு செய்ய, திருவாரூர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டு கருண் கரட் பரிந்துரை செய்தார். மாவட்ட ஆட்சித் தலைவர் மோகனச்சந்திரன் இருவரையும் குண்டர் சட்டத்தில் அடைக்க உத்தரவிட்டார். இதன்பேரில் இருவரும் குண்டர் சட்டத்தின் கீழ், திருச்சி மத்திய சிறையில் அடைக்கப்பட்டனர். சிறப்பாக பணியாற்றிய திருத்துறைப்பூண்டி இன்ஸ்பெக்டர் கழனியப்பன், உதவி ஆய்வாளர் யுவராஜ் மற்றும் போலீசாரை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் கருண் கரட் வெகுவாக பாராட்டினார்.

# காங்கிரஸ் நிர்வாகிக்கு கொலை மிரட்டல்!



கோவை, டிச.22 -

கோவை மாவட்டம் காங்கிரஸ் கட்சியின் முக்கிய பொறுப்பில் நிர்வாகியான அஸ்மத்துல்லா அவருடைய நண்பரின் மகளின் திருமண நிகழ்ச்சிக்கு கலந்து கொள்வதற்காக குடும்பத்துடன் போத்தனூரில் உள்ள தனியார் திருமண நிகழ்ச்சிக்கு சென்றுள்ளார். அதே திருமண நிகழ்ச்சிக்கு வருகை தந்த லவ்லி நசீர் வி .எம்.அலி மற்றும் அவருடன் வந்த சிலர் அஸ்மத்துல்லாவை வழிமறித்து நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ள வழக்கை பற்றி விசாரித்து ஆபாச வார்த்தைகளை உபயோகித்து தாக்க முயற்சித்துள்ளனர்.

இதை சற்றும் எதிர்பாராத காங்கிரஸ் நிர்வாகி அஸ்மத்துல்லா பக்குவமாக கையாண்டு போத்தனூர் காவல் நிலையத்தில் புகார் அளித்ததின் பேரில் லவ்லி நசீர், வி எம் அலி மற்றும் சிலர் மீது வழக்கு பதிவு செய்யப்பட்டு காவல்துறையினர் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# அதிமுக இளைஞர் இளம் பெண்கள் பாசறை மாவட்ட இணைச் செயலாளர் பிரபு விருப்ப மனு வழங்கினார்!



கிருஷ்ணகிரி, டிச.22-

2026 சட்டமன்றத் தேர்தலுக்கான விருப்ப மனு அளிக்கலாம் என தலைமைக் கழகத்தில் அறிவிக்கப்பட்டுள்ளது அதை தொடர்ந்து கிருஷ்ணகிரி மாவட்டம் பர்கூர் அடுத்த தொகரப்பள்ளி பில்ல கொட்டாய் கிராமத்தைச் சேர்ந்த இளைஞர் இளம்பெண்கள் பாசறை மாவட்ட இனை செயலாளர் பிரபு விருப்பமனுவை தலைமைக் கழகத்தில் வழங்கினார் இவர் முன்னாள் ஊராட்சி மன்ற தலைவரின் கணவரும் கழக பிரமுகரும் பணியாற்றியவர் பொதுமக்களிடையே நல்ல மதிப்புகளை பெற்றவர் பர்கூர் வட்டாரத்தில் அனைவரிடமும் எளிமையாக பழகக் கூடியவர் என சமூக ஆர்வலர்களும் பொதுமக்களும் தெரிவித்தனர் .

# தி.மு.க. வழக்கறிஞர் அணி கிறிஸ்துமஸ் கொண்டாட்டம்



பரமக்குடி, டிச.22:-

பரமக்குடி மேலச்சத்திரம் சி.எஸ்.ஐ. சர்ச்சில் கிறிஸ்துமஸ் பண்டிகையை முன்னிட்டு ராமநாதபுரம் மாவட்ட தி.மு.க வழக்கறிஞர் அணி சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா நடை பெற்றது.

இவ்விழாவில், ராமநாதபுரம் தி.மு.க மாவட்ட செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம். எல்.ஏ. தலைமை வகித்து ஏழை, எளிய மக்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார். ராமநாதபுரம் மாவட்ட வழக்கறிஞர் அணி அமைப்பாளர் கருணாநிதி,

போதகர் விஜயகுமார், உதவி போதகர் ஜேசுதாஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

நிகழ்ச்சியில் காதர் பாட்சா முத்துராமலிங்கம் எம்.எல்.ஏ. பேசியதாவது:

முதல்- அமைச்சர் தலைமையிலான தி.மு.க அரசு சமூகநீதியை மைய மாகக் கொண்டு அனைத்து தரப்பு மக்களுக்கும் நலத்திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறது. சமூக சேவை மற்றும் சட்டப்பணிகளில் வழக்கறிஞர் அணியின் பங்கு மிகவும் முக்கியமானது. பொதுமக்களின் நலனுக்காக வழக்கறிஞர்கள் தொடர்ந்து பணியாற்ற வேண்டும் என கூறினார்.

நிகழ்ச்சியில் பரமக்குடி எம்எல்ஏ முருகேசன், நகர்மன்ற தலை வர் சேது கருணாநிதி, முன்னாள் அமைச்சர் சுந்தர ராஜன், ரவிச்சந்திர ராமவன்னி, திசைவீரன், வடக்கு நகர் செயலாளர் ஜீவரத்தினம், ஒன்றிய செயலாளர்கள் குணசேகரன், ஜெயக்குமார் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். மாவட்ட கூடுதல் அரசு வழக்கறிஞர் ஜான் ராஜதுரை நன்றி கூறினார்.

# திருவண்ணாமலை கார்த்திகை தீபத்திருவிழாவில் காவல்துறையுடன் இணைந்து சிறப்பாக பணியாற்றிய இளைஞர்களுக்கு விருது!

## துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி வழங்கினார்




திருவண்ணாமலை டிச.22-

திருவண்ணாமலையில் நடைபெற்ற கார்த்திகை தீபத்திருவிழாவின்போது மாவட்ட நிர்வாகம், காவல்துறையுடன் இணைந்து பாதுகாப்பு பணியில் 700க்கும் மேற்பட்ட இளைஞர்கள் கலந்துகொண்டு சேவை பணியில் ஈடுபட்டனர். இதையொட்டி தி.மலை டேனிஷ் மிஷன் மேல்நிலைப்பள்ளியில் சிறப்பாக பணியாற்றிய 250 திருவண்ணாமலை மாவட்ட மக்கள் நண்பர்கள் குழுவினருக்கு விருது மற்றும் பாராட்டு சான்றிதழ் வழங்கும் விழா நேற்று நடைபெற்றது.

இந்த விழாவுக்கு மாவட்ட மக்கள் நண்பர்கள் குழு மாவட்டதலைவர் ஏ.ஏ.ஆறுமுகம் தலைமை தாங்கினார். மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர்கள் பட்டிமன்ற நடுவர் கு.சபரி ஆசிரியர் ஜெய்பிலிப்ஸ் சாமிதம்பி, வி.அன்பரசு ஜி.சுரேஷ் பூ.கார்த்திகேயன் ஆகியோர் முன்னிலை வகிக்க ஜி.பிரவீன்குமார் அனைவரையும் வரவேற்றார். இதில் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்ட தமிழ்நாடு சட்டப்பேரவை துணை சபாநாயகர் கு.பிச்சாண்டி சிறப்பாக சேவை பணியாற்றிய இளைஞர்களுக்கு விருது மற்றும் பாராட்டு சான்றுகளை வழங்கினார்.

இந்த விழாவில் மூத்தோர் தடகள சங்க மாவட்ட தலைவர் ப.கார்த்திவேல்மாறன் கலைஞர் கருணாநிதி அரசு கலைக்கல்லூரி உதவி பேராசிரியர் டாக்டர் ச.குமார் கம்பன் ஐடிஐ முதல்வர் டி.ராமச்சந்திர பிரபு, ராஜலட்சுமி பாலிடெக்னிக் உதவி பேராசிரியர் பி.ராகுல்காந்தி அருணை இலக்கிய பொருளாளர் என்.ரவிச்சந்திரன் குத்துசண்டை பயிற்சியாளர் மணிமாறன் மற்றும் சி.குணா எஸ்.சௌந்தரபாண்டியன் கே.தினேஷ் எஸ்.அருண்குமார் எஸ்.ஆகாஷ் பி.சுஜித் எஸ்.தேன்மொழி உள்பட நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்ட துணை ஒருங்கிணைப்பாளர் கே.மல்லிகா அர்ஜுனன் நன்றி கூறினார்.

# அக்கார்டு தமிழ்நாடு டிராகன்ஸ்' ஹாக்கி அணி அறிமுகம்!




சென்னை, டிச.22-

ஹாக்கி இந்தியா லீக் தொடரில் தமிழ்நாட்டின் பெருமையைப் பறைசாற்றும் "அக்கார்டு தமிழ்நாடு டிராகன்ஸ்" (Accord Tamil Nadu Dragons) அணியின் அதிகாரப்பூர்வ அறிமுக விழா, சென்னையில் நடைபெற்றது. இவ்விழாவில் முக்கியப் பிரமுகர்கள், தமிழ்நாடு அரசு விளையாட்டுத்துறை பிரமுகர்கள் கலந்துகொண்டனர்.

அதனைத் தொடர்ந்து, அணியின் அதிகாரப்பூர்வ சின்னம் (Logo) மற்றும் வீரர்கள் அணியும் புதிய சீருடை (Jersey) ஆகியவை வெளியிடப்பட்டன.

இந்த அணியின் உரிமையாளரும், பாரத் பல்கலைக்கழகத்தின் நிர்வாக இயக்குனருமான டாக்டர் ஸ்வேதா சந்தீப் ஆனந்த், கல்வி மற்றும் மருத்துவம் வாயிலாக, சமூக மேம்பாட்டிற்காக பல்லாண்டுகளாகப் பங்காற்றி வருகிறார்.

அதே அர்ப்பணிப்புடன் தற்போது விளையாட்டுத் துறையிலும் இவர்கள் தடம் பதித்துள்ளனர்.

இவ்விழாவில், ஆசிய ஹாக்கி கூட்டமைப்பின் ‘வியூகம் மற்றும் திட்டமிடல்’ ஆலோசனைக் குழுவின் தலைவரும், அக்கார்டு குழுமத்தின் நிர்வாக இயக்குனருமான டாக்டர் ஜெ.சந்தீப் ஆனந்த், ஹாக்கி இந்தியாவின் பொருளாளரும் தமிழ்நாடு ஹாக்கி அமைப்பின் தலைவருமான சேகர் ஜெ. மனோகரன், அணியின் உதவி பயிற்சியாளர் விக்ரம் காந்த், அக்கார்டு தமிழ்நாடு டிராகன்ஸ் அணியின் முதன்மை செயல் அதிகாரி ஜோசப் மற்றும் அணியின் கேப்டன் அமித் ரோஹிதாஸ் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகக் கலந்துகொண்டனர்.

தமிழ்நாட்டைச் சேர்ந்த திறமையான வீரர்களுக்கு, ஹாக்கி இந்தியா லீக் மூலம் சர்வதேச அளவிலான வாய்ப்புகளை ஏற்படுத்தி தருவதே இதன் முக்கிய நோக்கமாகும். மேலும், நீண்டகால திட்டத்தின் ஒரு பகுதியாக, பாரத் பல்கலைக்கழகத்தின் கீழ் ஒரு பிரத்யேக ஹாக்கி அகாடமி அமைப்பதற்கும், மாநிலம் முழுவதும் உள்ள உடற்கல்வி இயக்குனர்கள் மற்றும் பயிற்சியாளர்களின் திறனை மேம்படுத்தவும் திட்டமிடப்பட்டுள்ளது.

அனுபவம் வாய்ந்த வீரர்கள் மற்றும் துடிப்புமிக்க இளம் வீரர்கள் என மிகச்சரியான கலவையில் இந்த அணி உருவாக்கப்பட்டுள்ளது. வரவிருக்கும் இந்திய ஹாக்கி லீக் சீசனில் மற்ற அணிகளுக்கு இது கடும் போட்டியளிக்கும் .

தமிழ்நாட்டின் உணர்வையும் பெருமையையும் தாங்கி களமிறங்கும் ‘டிராகன்ஸ்’ அணிக்கு ரசிகர்கள், ஊடகத்துறையினர் மற்றும் விளையாட்டு ஆர்வலர்கள் அனைவரும் பேராதரவு அளிக்க வேண்டும் என்று அணி நிர்வாகம் கேட்டுக்கொண்டுள்ளது.

தின தமிழ் நாளிதழில் விளம்பரம் செய்து பயன் பெறுங்கள்!

# சங்கரன்கோவிலில் நள்ளிரவில் வாறுகால் சுத்தப்படுத்தும் பணி ராஜா எம்எல்ஏ, சேர்மன் கௌசல்யா வெங்கடேஷ் அதிரடி!

## வியாபாரிகள் , பொதுமக்கள் நன்றி தெரிவிப்பு



சங்கரன்கோவில்., டிச.22-

தென்காசி மாவட்டம் சங்கரன்கோவிலில் நீண்ட நாட்களாக சுத்தப்படுத்தப்படாமல் இருந்த வாறுகாலை வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கையை ஏற்று நடவடிக்கை எடுத்த ராஜா எம்எல்ஏ மற்றும் சேர்மன் கௌசல்யாவிற்கு நன்றி தெரிவித்துள்ளனர்.

சங்கரன்கோவில் பேருந்து நிலையம் அருகே உள்ள பகுதி மற்றும் ராஜபாளையம் சாலையில் உள்ள பகுதியில் வணிக வளாகங்கள் அதிகமாக உள்ள சூழ்நிலையில் அந்தப் பகுதியில் உள்ள வாறுகாலை கடந்த 30 ஆண்டுகளுக்கு மேல் சுத்தப்படுத்தவில்லை எனவும், இதனால் அப்பகுதியில் மழைநீர் செல்ல முடியாத சூழ்நிலை நிலவி வருவதாகவும் எனவே இதனை சுத்தப்படுத்த உடனடியாக நடவடிக்கை எடுக்க வேண்டும் என தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ மற்றும் சேர்மன் கௌசல்யாவிடம் அந்தப் பகுதி வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்தனர். அதனைத் தொடர்ந்து கோரிக்கையை ஏற்று உடனடியாக அந்த வாதிகளை வியாபாரிகள் ஒத்துழைப்புடன் குற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்பட்டது இதனை முன்னிட்டு கடந்த வியாழக்கிழமை இரவு வாறு கால் சுத்தப்படுத்தும் பணி மேற்கொள்ளப்பட்டது . சுத்தப்படுத்தும் பணிகளை தென்காசி வடக்கு மாவட்ட செயலாளர் ராஜா எம்எல்ஏ மற்றும் சேர்மன் கௌசல்யா ஆகியோர் ஆய்வு செய்து வாறு கால் சுத்தப்படுத்தும் பணிகளை வேகமாக முடிக்க நடவடிக்கை எடுத்தனர். அதனைத் தொடர்ந்து நகராட்சி பணியாளர்கள் அனைவரும் ஒன்றிணைந்து ஒரே இரவில் வாருகால் சுத்தப்படுத்தும் பணியை வெற்றிகரமாக செய்து முடித்தனர். வியாபாரிகள் மற்றும் பொதுமக்களின் கோரிக்கையை ஏற்று நடவடிக்கை எடுத்த ராஜா எம்எல்ஏ விற்கும் அந்த பணிகளை உடனடியாக செய்து முடிக்கும் வகையில் பணிகளை துரிதப்படுத்திய நகராட்சி சேர்மன் கௌசல்யாவிற்கும் நன்றி தெரிவித்துக் கொண்டனர். இந்த நிகழ்வின் போது நகராட்சி சுகாதார அலுவலர் வெங்கட்ராமன்,சங்கரன்கோவில் நகர செயலாளர் பிரகாஷ், மாணவரணி வெங்கடேஷ் மற்றும் வியாபாரிகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் உடனிருந்தனர்.

# ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அண்ணாண்டப்பட்டி கிராமத்தில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கு சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜி பூமி பூஜை!



திருப்பத்தூர், டிச.22-

திருப்பத்தூர் மாவட்டம் ஜோலார்பேட்டை சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட அண்ணான்டப்பட்டி கிராமத்தில் ரூ.20 இலட்சம் மதிப்பீட்டில் பல்நோக்கு கட்டிடம் கட்டுவதற்கான பூமி பூஜையினை மாவட்ட கழக செயலாளரும் ஜோலார்பேட்டை சட்டமன்ற உறுப்பினர் க.தேவராஜி துவக்கி வைத்தார். இந்நிகழ்ச்சியானது திருப்பத்தூர் வடக்கு ஒன்றிய செயலாளர், அண்ணான்டப்பட்டி ஊராட்சி மன்ற தலைவர் ஏ.சி.சுரேஷ் தலைமையில் நடைபெற்றது. தலைமை கழக பேச்சாளர் மேகநாதன் அனைவரையும் வரவேற்று பேசினார். சட்டமன்ற உறுப்பினர் பேசுகையில்: அண்ணான்டப்பட்டி கிராமத்திற்கு இதுவரை ஆறு கோடிக்கு மேல் பணிகள் செயல்படுத்தப்பட்டுள்ளது. திராவிட மாடல் ஆட்சியில் பல்வேறு பணிகள் நடைபெற ஆதரவு அளிக்க வேண்டும் என்று பேசினார்.

இந்நிகழ்ச்சியில் கவுன்சிலர் மல்லிகா, துணை தலைவர் சிவக்குமார், வார்டு உறுப்பினர்கள் விக்னேஷ், ரம்யா பிரவீன், சிவரஞ்சனி, முன்னாள் தலைவர் முருகேசன், சாமராஜி,காமராஜி, பூபதி,சர்வேஷ், தாசரதி, ராம்குமார், சூர்ய குமார், விவேக், கிளை செயலாளர் இரணியன், செல்வரிஜி, கழக பிரதிநிதிகள் மற்றும் ஊர் பொதுமக்கள் என பலரும் கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் தமிழ்நாடு அரசு விருதாளர் கலைவளர்மணி செ.ரஜினியின் அதிர்வு கிராமிய கலைக் குழுவின் வரவேற்பு நிகழ்ச்சி நடைப்பெற்றது.

# திருப்பூரில் காங்கிரசார் கண்டன ஆர்ப்பாட்டம்



திருப்பூர், டிசம்பர்.22–

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்பு திட்டத்தின் பெயரை மாற்றி திட்டத்தை நீர்த்துப் போகிற முயற்சியை செய்த ஒன்றிய பாஜக அரசை கண்டித்து திருப்பூரில் அகில இந்திய காங்கிரஸ் கட்சியின் சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் ரயில் நிலையம் முன்பு காங்கிரஸ் கட்சியின் தேசிய செயலாளர். கோபிநாத் பழனியப்பன் தலைமையில் நடைபெற்றது.இந்த ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்ட காங்கிரஸ் கட்சியினர் ஒன்றிய பாஜக அரசின் தவறான கொள்கைகளை கண்டித்து கண்டனம் முழக்கங்களை எழுப்பியும் ஒன்றிய அரசுக்கு எதிரான கண்டன பதாகைகளை ஏந்தியும் முழக்கங்களை எழுப்பி ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். இந்த ஆர்ப்பாட்டத்தில் காங்கிரஸ் கட்சியின் மாநில செயலாளர்கள்.ஜிஞ்ரி. சித்திக், செல்வகுமார், மற்றும் வட்டார காங்கிரஸ் கட்சி நிர்வாகிகள் மாவட்ட சார்பணி நிர்வாகிகள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



வேலூர் மாநகர மாவட்ட காங்கிரஸ் கமிட்டி சார்பில் மகாத்மா காந்தி தேசிய கிராமப்புற வேலை உறுதி சட்டம் பெயரை மாற்றியதை கண்டித்தும், நிதியை 40விழுக்காடாக குறைத்ததை கண்டித்தும் வேலூர் அண்ணா கலையரங்கம் அருகில் மாவட்ட தலைவர் டீக்காராமன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் காங்கிரஸ் எஸ்சிஎஸ்டி பிரிவு மாநில செயலாளர் சித்தரஞ்சன் சிறுபான்மை பிரிவு மாவட்ட தலைவர் வாகித்பாஷா, விவசாய பிரிவு தலைவர் சேகர், முகமது அலிஜின்னா (தொழிற்சங்கம்), சோமு, பழக்கடை மணி, ஹரி, கப்பல்மணி, காஞ்சனா (மகளிர் அணி) மற்றும் ஏராளமான நிர்வாகிகள் கட்சியினர் கலந்து கொண்டனர்.




# வேலூர் மாவட்டத்தில் சட்டவிரோதமாக கடத்தி கொண்டுவரப்பட்ட 27 கிலோ குட்கா பொருட்கள் பறிமுதல்



வேலூர், டிச.22-

வேலூர் மாவட்டத்தில் சட்டவிரோதமாக போதைப்பொருட்கள் விற்பவர்கள் மற்றும் கடத்துபவர்களை தடுக்க, மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஆ.மயில்வாகனன் உத்தரவின்படி, அணைக்கட்டு உட்கோட்ட துணை காவல் கண்காணிப்பாளர் நந்தகுமார் வழிகாட்டுதலின் பேரில், டிச 20 அன்று பள்ளிகொண்டா காவல் நிலைய எல்லைக்குட்பட்ட சென்னை-பெங்களூரு தேசிய நெடுஞ்சாலை வெட்டுவானம் பகுதியில், காவல் ஆய்வாளர் ராமகிருஷ்ணன், உதவி ஆய்வாளர் முத்துக்குமார் மற்றும் மாவட்ட தனிப்படை போலீசார் வாகன சோதனை மேற்கொண்டபோது அவ்வழியாக வந்த ஜிழி 18 ஙிபி 3012 என்ற இரு சக்கர வாகனத்தை மடக்கி சோதனை மேற்கொண்டதில், சட்டவிரோதமாக கடத்தி கொண்டு வரப்பட்ட சுமார் 18,515 ரூபாய் மதிப்புடைய, 27 கிலோ குட்கா பொருட்களை பறிமுதல் செய்து, குடியாத்தம் சுண்ணாம்புப்பேட்டை பகுதியை சேர்ந்த எதிரிகள் சுஹேல், வ/28, த/பெ.அமானுல்லா மற்றும் தஹனுன், வ/22, த/பெ.நவாஸ் ஆகியோர் மீது வழக்கு பதிவு செய்து, இருசக்கர வாகனம் பறிமுதல் செய்யப்பட்டு, எதிரிகள் இருவரும் நீதிமன்ற காவலுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். மேலும் இதுபோன்ற குற்ற செயல்களில் ஈடுபடுவோர் மீது கடுமையான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என வேலூர் மாவட்ட காவல்துறை எச்சரித்துள்ளது.

# 8 கிராம உதவியாளர் பணியிடங்களுக்கு 626பேர் விண்ணப்பித்திருந்த நிலையில் 469 பேர் மட்டுமே எழுத்து தேர்வில் பங்கேற்பு



திருத்துறைப்பூண்டி, டிசம்பர்.22-

திருவாரூர் மாவட்டம், மன்னார்குடி கோட்டத்திற்குட்பட்ட, திருத்துறைப்பூண்டி தாலுகாவில் காலியாக உள்ள 11-வருவாய்த்துறை கிராம உதவியாளர் பணி இடங்களுக்கு நேரடி நியமனம் செய்ய விண்ணப்பிக்கலாம் என மாவட்டம் நிர்வாகம் அறிவிப்பு வெளியிட்டிருந்தது. 11-பணியிடங்களில்

முன்னுரிமை அடிப்படையில் 3-இடங்கள் இராணுவ வீரர்களுக்கு ஒதுக்கப்பட்ட நிலையில், மீதமுள்ள 8 பணியிடங்களுக்கு மொத்தம் 626 பேர் விண்ணப்பித்திருந்தனர். அரசு நிர்ணயித்த வயது வரம்புடைய அனைவருக்கும் எழுத்துத் தேர்வுக்கான அனுமதிச்சீட்டு முறையாக அனுப்பப்பட்டது. அதன்படி, திருத்துறைப்பூண்டி தூய அந்தோணியார் மெட்ரிக் பள்ளியில் நேற்று நடைபெற்ற எழுத்து தேர்வில் 469 பேர் மட்டுமே கலந்து கொண்டனர். 157 பேர் கலந்து கொள்ளவில்லை. தேர்வர்கள் 10-15 மணி வரை உள்ளே அனுமதிக்கப்பட்ட நிலையில், தாமதமாக வந்த

கீழப்பெருமழையை சேர்ந்த சிவகாமசுந்தரி என்ற பெண்ணும் மற்ற இருவரும் திருப்பி அனுப்பப்பட்டனர். எவ்வளவு கெஞ்சியும், அதிகாரிகள் அவர்களை உள்ளே அனுமதிக்காததால், கண்ணீருடன் திரும்பி சென்றனர். தேர்வில் கலந்துகொண்டவர்கள் கூறுகையில், தேர்வு எளிதாக இருந்ததாகவும், நேர்மையான முறையை பின்பற்றி பணி நியமனம் செய்யப்பட வேண்டுமெனவும் கருத்து தெரிவித்தனர். செய்தி சேகரிக்க சென்ற பத்திரிக்கையாளர்களுக்கு அனுமதி மறுக்கப்பட்டது. மீண்டும் 2026 ஜனவரி 4,5 தேதிகளில் வட்டாட்சியர் அலுவலகத்தில் நேர்முக தேர்வு நடைபெற உள்ளது குறிப்பிடத்தக்கது.

# சாமிதோப்பு அருகே அரசு பஸ்சில் மோதிய ஆட்டோ டிரைவர், மூதாட்டி படுகாயம்

தென்தாமரைகுளம், டிச.22–

மயிலாடி பகுதியை சேர்ந்தவர் ராஜா வயது 37.இவர் கன்னியாகுமரி அரசு போக்குவரத்து கழக பணிமனையில் தற்காலிக ஓட்டுநராக பணிபுரிந்து வருகிறார்.இவர் சம்பவத்தன்று கன்னியாகுமரியில் இருந்து சாமி தோப்பு வழியாக வடசேரிக்கு அரசு பஸ்ஸை ஓட்டிவந்தார். அப்போது சாமிதோப்பு அருகே கரம்பவிளையில் உள்ள டாஸ்மாக் கடை அருகே பஸ் வந்தபோது, நெல்லை மாவட்டம் ராதாபுரம் அருகே உள்ள கண்ணன்குளம் பகுதியை சேர்ந்த சிவபாலன்,வயது 38. என்பவர் ஓட்டி வந்த ஆட்டோ கட்டுப்பாட்டை இழந்து தறிகெட்டு ஓடி அரசு பஸ் மீது வேகமாக மோதியள்ளது. இதில் ஆட்டோ டிரைவர் சிவபாலன் மற்றும் ஆட்டோவில் வந்த கண்ணன்குளம் பகுதியை சேர்ந்த மூதாட்டி பகவதியம்மாள் வயது74 ஆகியோர் படுகாயமடைந்தனர். இதைபார்த்த அங்கு நின்றவர்கள் அவர்கள் 2 பேரையும் மீட்டு 108 ஆம்புலன்சில் ஏற்றி மருத்துவம்னையில் அனுமதித்துள்ளனர். இது குறித்து அரசு பஸ் டிரைவர் ராஜா தென்தாமரைகுளம் போலீசில் அளித்த புகாரின்படி போலீசார் வழக்குப்பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.



மதுரை மாவட்டம் மாட்டுத்தாவணி பேரூந்து நிலையம் அருகே தமிழ்நாடு தொழில் வளர்ச்சிக் கழகம்(தொழில்துறை) சார்பில் ரூபாய்.314.29 கோடி மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் மதுரை தகவல் தொழில்நுட்பப் பூங்கா கட்டுமான பணிகளை தொழில்துறை அமைச்சர் டாக்டர்.டி.ஆர்.பி.இராஜா ஆய்வு செய்து பார்வையிட்டார். மதுரை வடக்கு சட்டமன்ற உறுபபினர் கோ.தளபதி, மாவட்ட வருவாய் அலுவலர் அன்பழகன் ஆகியோர் உடன் உள்ளனர்.

# அகில இந்திய அளவில் ஊழல் செய்வதில் தமிழ்நாடு அரசு முதலிடத்தில் உள்ளது : டாக்டர் சரவணன் குற்றச்சாட்டு!



மதுரை, டிசம்பர். 22-

மதுரையில் நடைபெற்ற கிறிஸ்துமஸ் பெரு விழாவில் பங்கேற்ற அதிமுக மருத்துவரணி இணைச் செயலாளர் டாக்டர் பா.சரவணன் பங்கேற்று கூறியதாவது

இந்தியாவில் அதிக அளவில் ஊழல் செய்வதில் திமுக அரசு முதலிடத்தில் உள்ளது. கடந்த நான்கரை ஆண்டுகளில் அதிகமாக கடன் வாங்கி ஒவ்வொரு குடும்பத்தின் தலையில் ரூ 4.60 லட்சம் கடன் சுமையை வைத்தது தான் திமுகவின் கின்னஸ் சாதனை. சிறுபான்மையின மக்களுக்கு பாதுகாப்பு அரண் எடப்பாடியார் தான். குறிப்பாக கிறிஸ்தவ மக்கள் ஜெருசலம் செல்ல முதன் முதலில் நிதி உதவியை வழங்கியது புரட்சித்தலைவி அம்மா, அதை தொடர்ந்து மக்களின் கோரிக்கையை ஏற்று அதை உயர்த்தி தந்ததவர் எடப்பாடியார். அதேபோல அன்னை தெரசா பெயரில் பல்கலைக்கழகம் அமைத்து தந்தது அம்மாவின் அரசாகும் எடப்பாடியார் ஆட்சியில் கிறிஸ்தவ ஆலயங்கள் சீரமைக்க பல்வேறு நிதிகள் வழங்கப்பட்டது. என்றைக்குமே சிறுபான்மையின மக்களை ஓட்டுக்காக அதிமுக பயன்படுத்தியது கிடையாது ஆனால் திமுக தான் ஓட்டுக்காக கிறிஸ்துவ மக்களை பயன்படுத்துவார்கள். மேலும் தமிழகத்தில் உள்ள அரசு அலுவலகங்களுக்கு பொது மக்கள் தேவைக்கு ஏற்ப செல்லும் போது அங்கு கமிஷன், கரப்ஷன், கலெக்ஷன் என்று கழகப் பொதுச் செயலாளர் எடப்பாடியார் தொடர்ந்து ஸ்டாலின் திமுக அரசின் மோசமான நிர்வாக சீர்கேட்டை அம்பலப்படுத்தி வருகிறார்.

இதைத் தொடர்ந்து முன்னாள் நீதியரசர் மார்க்கண்டே கட்ஜூ கூட இந்தியாவிலேயே ஊழல் அதிகமாக நடைபெறும் மாநிலமாக தமிழகம் உள்ளது. ஊழல் இல்லாமல் எதுவும் நகராத மாநிலமாக திறமையை பெற்றுள்ளது. திமுக அரசுக்கு ஊழல் செய்வதில் பட்டமே பெற்றுள்ளது என கூறியுள்ளார். எனவே திமுகவிற்கு ஊழல் ஒன்றும் புதிது அல்ல, ஊழலுக்காக கலைக்கப்பட்ட ஆட்சி தான் திமுக மத்திய அரசில் அங்கம் வகித்த போது 2,500 கோடியில் நடைபெற்ற சேது சமுத்திர திட்டத்தில் ஊழல், 1.75 லட்சம் கோடி அளவில் 2 ஜி ஊழல் செய்து ஒட்டுமொத்த உலகத்தையே பார்க்க வைத்த கட்சிதான் திமுக என்பதை நாட்டு மக்கள் நன்கு அறிவார்கள்.

இன்றைக்கு ஊழல் செய்வதில் கருணாநிதியை ஸ்டாலின் மிஞ்சி விட்டார் . 54 துறைகளில் கொண்ட தமிழக அமைச்சரவையில் முதலமைச்சர் ஸ்டாலினை சேர்த்து 34 அமைச்சர்கள் உள்ளார்கள் இன்றைக்கு அனைத்து துறைகளிலும் ஊழல் தலை விரித்து ஆடுகிறது. கடந்த நிதியாண்டில் மூன்று லட்சம் கோடிக்கு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டது அடுத்து வரும் நிதிநிலை அறிக்கையில் திமுக அமைச்சர்கள் அடித்த கொள்ளையை வைத்து மூன்று லட்சம் கோடிக்கு நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யலாம் ஸ்டாலின் குடும்பத்தில் உள்ள ஊழல் பணத்தால் தமிழகத்தின் ஒட்டுமொத்த கடனையும் அடைத்து விடலாம் பி.டி.ஆர்.தியாகராஜன் நிதி அமைச்சராக இருந்த பொழுது முதலமைச்சர் குடும்பத்தைச் சார்ந்த உதயநிதியும், சபரிசனும் 30,000 கோடியை கொள்ளை அடித்து அதை எங்கே வைப்பது என்று தெரியவில்லை என்று கூறினார்.

அதேபோல் கனிம வளத்துறையில் 22.70 லட்சம் யூனிட் மணல் திருடப்பட்டு அதிலும் சுமார் 4,730 கோடிகளில் ஊழல் நடைபெற்றுள்ளது .தமிழகத்தில் 4,777 மதுக்கடைகள் உள்ளது இதில் 1852 கடைகள் மட்டும் தான் பில் போடப்படுகிறது இதிலும் மிகப்பெரிய மோசடி நடக்கிறது

அது மட்டுமல்ல பாட்டிலில் பத்து ரூபாய்க்கு வைத்து ஒரு மாதத்திற்கு 450 கோடி ஒரு ஆண்டுக்கு 5000 கோடி அளவில் பணம் கொள்ளையடிக்கப்படுகிறது தமிழகம் முழுவதும் 582 பத்திரப்பதிவு அலுவலகங்கள் உள்ளது இதில் யாராவது பத்திரம் பதிவு செய்தால் அதில் 10% கமிஷன் மேல்மட்டத்திற்கு செல்கிறது

அமைச்சர் நேரு தம்பி வங்கியில் கடன் வாங்கி 30 கோடி அளவில் மோசடி செய்ததில் அமலாக்கத் துறை சோதனை செய்தது அதில் வேலைக்கு பணம் வாங்கியதில் 8,99 கோடி ஊழல் நடைபெற்றுள்ளது என்றும் டெண்டர் விட்டதில் 1020 கோடி ஊழல் நடைபெற்றுள்ளது மொத்தம் 1,908 கோடி ஊழல் நடைபெற்று உள்ளது இந்த ஊழல் குறித்து வழக்கு பதிவு செய்ய வேண்டும் அமலாக்கத் துறை இதுவரை தமிழக அரசு மீது வழக்கு போடவில்லை குறிப்பாக கடந்த 2022 ஆண்டில் பொங்கல் பரிசு வழங்கினார்கள் வெல்லம் ஒழுகியது, அரிசியில் வண்டு, புலியில் பல்லி இருந்தது இப்படி அதில் 500 கோடி அளவில் கொள்ளை அடித்தார்கள். அதனைத் தொடர்ந்து சென்னையில் 5000 கோடியில் மழை வடிகால் பணி செய்தில் மிகப் பெரிய ஊழலை செய்தார்கள் சென்னையில் கழிப்பறையில் சுத்தம் செய்வதில் கூட ஆயிரம் கோடி ஊழல் நடைபெற்றது.

அதேபோல நுகர் பொருள் வாணிபக் கழகத்தில் 170 கோடி ஊழல், தோட்டக்கலைத் துறையில் 141 கோடி ஊழல் , இப்படி சொல்லிக்கொண்டே செய்யலாம்.

திருவண்ணாமலையில் பாலம் கட்டினார்கள் ஆனால் அந்த பாலம் உடைந்து விட்டது. ஆனால் அந்த துறை அமைச்சரோ திருவண்ணாமலையில் நடைபெற்ற திமுக இளைஞரணி விழாவில் ஸ்டாலினுக்கு வெள்ளி சிம்மாசனத்தை வழங்குகிறார்.

இன்றைக்கு ஸ்டாலின் ஆட்சிக்கு வந்த நான்கரை ஆண்டுகளில் 5 லட்சம் கோடி கடனை வாங்கியுள்ளனர் இதனால் தமிழகத்தின் ஒவ்வொரு குடும்பத்திற்கும் 4.60 லட்சம் கடன் சுமை ஏற்பட்டுள்ளது இதே 2021 ஆண்டில் திமுக ஆட்சி பொறுப்பு ஏற்கும் போது ஒவ்வொரு குடும்பத்திற்கும் கடன் சுமை 2.61 லட்சம் தான் இருந்தது தற்போது இரண்டு லட்சம் அதிகரித்துள்ளது என்று கூறினார்.

# மதுரை கேஎம்ஆர் பள்ளியின் 12-வது ஆண்டு விழாவில் முன்னாள் டிஜிபி பங்கேற்பு




மதுரை, டிசம்பர். 22-

மதுரை நாகமலை புதுக்கோட்டை அருகே உள்ள கேஎம்ஆர் சிபிஎஸ்இ பள்ளியின் 12 ஆம் ஆண்டு பள்ளித் தாளாளர் முனைவர் பூ. கிருஷ்ணவேணி தலைமையில் நடைபெற்ற இந்த விழாவில் சிறப்பு விருந்தினர்களாக தமிழ்நாடு முன்னாள் காவல்துறை தலைவர் சி.சைலேந்திரபாபு மற்றும் தமிழ்நாடு தொடக்க கல்வி இணை இயக்குனர் ஆர்.சுவாமிநாதன் ஆகியோர் பங்கேற்றனர். இதனைத் தொடர்ந்து சிறப்பு விருந்தினர் சைலேந்திரபாபு பேசுகையில்

மாணவர்கள் சர்வதேச அளவிற்கு தங்களுடைய திறமையை வளர்த்துக் கொள்ள வேண்டும் எனவும், அதற்காக பெற்றோர்கள் மற்றும் கே.எம்.ஆர் பள்ளி எடுத்து வரும் முயற்சிகளையும் வெகுவாக பாராட்டி சிறப்புரையாற்றியதோடு பல துறைகளிலும் சிறந்து விளங்கிய மாணவர்களுக்கு பரிசுகள் வழங்கி பாராட்டு தெரிவித்தார். இந்த நிகழ்ச்சியில் முதன்மை விருந்தினராக கலந்து கொண்ட சேரலாதன், ஆர்கிடெக்சர் பேசிய போது மாணவர்கள் தங்கள் எதிர்காலத்தின் திறவுகோலை மாணவப்பருவத்தில் தெரிவு செய்ய வேண்டும் என

பல்வேறு கருத்துக்களை எடுத்துரைத்தார் அதன் தொடர்ச்சியாக தொடக்கக் கல்வி இணை இயக்குநர் ஆர்.சுவாமிநாதன். மாணவர்கள் எதிர்காலம் சிறக்க வேண்டும் என வாழ்த்தி பேசினார். இந்த விழாவில் ஆசிரியர் பெருமக்கள் பள்ளி மாணவ மாணவிகள் மற்றும் பெற்றோர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர். இதற்கான ஏற்பாடுகளை பள்ளியின் முதன்மை முதல்வர். விஜயாசுந்தர், மற்றும் முதல்வர். சரஸ்வதி ஆகியோர் மேற்பார்வையில் சிறப்பாக நடைபெற்றது.

## இளம் சாதனையாளர்களுக்கு விருது வழங்கும் விழா : தளவாய்சுந்தரம் எம்.எல்.ஏ., பங்கேற்பு



நாகர்கோவில், டிச. 22-
கன்னியாகுமரியில் ஐந்து வயதிற்கு ட்பட்ட குழந்தை உலக சாதனையாளர்க ளுக்கு விருது வழங்கும் விழா கன்னியாகு மரியில் நேற்று நடைபெற்றது. இதில். தள வாய்சுந்தரம் எம்.எல்.ஏ கலந்து கொண்டு சாதனை மாணவர்களுக்கு விருதுகளை வழங்கினார். இந்நிகழ்வில் அகஸ்தீஸ்வரம் தெற்கு ஒன்றிய கழகச் செயலாளர் தாமரை தினேஷ் அகஸ்தீஸ்வரம் பேரூர் செயலாளர் தனபாலன் கன்னியாகுமரி பேரூர் செய லாளர் எழிலன் மற்றும் விருது பெறும் குழந்தைகளுடன் அவர்களது பெற்றோரும் கலந்து கொண்டனர்.

## மயிலாடியில் விவேகானந்தா நற்பணி மன்றத்தின் சார்பில் பூர்ணசந்திரனுக்கு தீபம் ஏந்தி அஞ்சலி!



கன்னியாகுமரி, டிச. 22-
மயிலாடிபுதூர் விவேகானந்தா நற்பணி மன்றத்தின் சார்பில் திருப்பரங்குன்றம் மலை உச்சியில் உள்ள தீபத்தூணில் தீபம் ஏற்றக் கோரி உயிர்நீத்த பூர்ணசந்திரனுக்கு தீபம் ஏந்தி அஞ்சலி செலுத்தப்பட்டது. நிக ழ்ச்சிக்கு மயிலை டாக்டர் சிவம்முருகேசன் தலைமை தாங்கினார். நற்பணி மன்ற துணைத் தலைவர் என்.ஆர். ராஜேஷ், பொருளாளர் சிவகணேசன், செயற்குழு உறுப்பினர் பொன் வெனீஸ் ஆகியோர் முன்னிலை வகித்தனர். சிறப்பு விருந்தின ராக வக்கீல் அருள் சிவா கலந்து கொண்டு பூர்ணசந்திரன் உருவப்படத்திற்கு மாலை அணிவித்து அஞ்சலி செலுத்தினார். தொட ர்ந்து தீபம் ஏந்தி அஞ்சலி செலுத்தும் நிக ழ்வை தொடங்கி வைத்தார். இந்நிகழ்வில் ரெத்தினசாமி, ஜெகதீஷ், சற்குணம், தங் கராஜ், கருப்பசாமி, நித்தியா, சுதா, சுபா உட்பட கலந்து கொண்டனர்.

## வேலூர் நறுவீ மருத்துவமனையில் நிறுவனர் தின விழா கொண்டாட்டம்



வேலூர், டிச.22-
வேலூர் நறுவீ மருத்துவமனையில் நடைபெற்ற நிறுவனர் (Founders Day) தின விழாவையொட்டி ஏழை பள்ளி மாணவர்களின் உயர்கல்வி பயில கல்வி உதவித் தொகை, முதியோர்களுக்கு மதிய உணவை மருத்துவமனை தலைவர் முனை வர் ஜி.வி. சம்பத் வழங்கினார்.

இவ்விழாவையொட்டி மருத்துவமனை ஊழியர்களுக்கு நடத்தப்பட்ட பல்வேறு கலாச்சார போட்டிகளில் பங்கேற்று வெற்றி பெற்றவர்களுக்கு பரிசு கோப்பை மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டது.

இதில் நமது கலாச்சாரம் மற்றும் பண்பா ட்டை பிரதிபலிக்கும் வகையிலும், நாட்டில் பசுமையை பற்றிய விழிப்புணர்வு, உலக சமத்துவம், மதங்களுக்கு இடையே சகோ தரத்துவம், போதை ஒழிப்பு, உள்ளிட்ட பல்வேறு தலைப்புகளின் கீழ் விழிப்புணர்வு கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றது.

நிகழ்வில் நறுவீ மருத்துவமனை நிறு வனத் தலைவர் முனைவர் ஜி.வி. சம்பத் தலைமை வகித்து பாராட்டி பேசுகையில்

நிறுவனர் தின விழா என்பது நறுவீ குடும்ப விழாவாகும். கடந்த ஐந்து ஆண் டுகளாக இம்மருத்துவமனை உங்களின் சேவை மற்றும் அர்ப்பணிப்பு காரணமாக படிப்படியாக இம்மருத்துவமனை உயர்ந்து வருகிறது.

மேலும் அரிய அறுவை சிகிச்சைகள் மற்றும் கிரிட்டிகலான அறுவை சிகிச்சை கள் நவீன முறையில் சிறப்பாக செய்வதின் மூலம் நோயாளிகள் குணமடைந்து மரு த்துவமனையை பாராட்டி வருகின்றனர். இங்கு மருத்துவ சிகிச்சை என்பது வணிக ரீதியானது அல்ல, உன்னதமான அர்ப ணிப்புடன் நோயாளிகளை காப்பாற்றும் பணியாக செய்யப்படுகிறது.

மேலும், நமது மருத்துவ சேவைகள் பற்றி அனைவரும் அறிந்திடும் வகையில் நாம் அதிக அளவில் சமூக ஊடகங்களில் பதிவிட வேண்டும். இன்றைய கால கட் டத்தில் இளைஞர்களின் வாழ்க்கை முறை மாறி வருகிறது. மது மற்றும் போதைக்கு அடிமையாகி வரும் நிலை உள்ளது. இதனை தடுக்கும் வகையில் மருத்துவ பணியாளர்கள் இளைஞர்களுக்கு மது மற்றும் போதையினால் ஏற்படும் தீமைகள் பற்றி எடுத்துரைத்து நல்வழிப்படுத்த வேண் டும் என்று பேசினார்

இந்த விழாவில் மருத்துவமனை துணைத் தலைவர் அனிதா சம்பத், செயல் இயக்குநர் பால் ஹென்றி, மருத்துவ சேவை கள் தலைவர் டாக்டர் அரவிந்தன் நாயர், மருத்துவ கண்காணிப்பாளர் டாக்டர் ஜேக் கப் ஜோஸ், மருத்துவ கல்வி இயக்குநர் டாக்டர் திலீப் மத்தாய், பொது மருத்துவ நிபுணர் டாக்டர் குணசேகரன், மயக்கவியல் நிபுணர் டாக்டர் சரவணன் அங்கிசெட்டி, தலைமை இயக்குதல் அலுவலர் சரவணன் இராமன் மற்றும் மருத்துவமனை மருத் துவர்கள், செவிலியர்கள், ஊழியர்கள் பெருமளவில் பங்கேற்று நிகழ்ச்சியை சிற ப்பித்தனர்.

மருத்துவமனை மனிதவள பொது மேலாளர் லலிதா அனைவரையும் வரவே ற்க, முடிவில் தலைமை செவிலியர் அலுவ லர் மேரி மர்ஜெரி நன்றி தெரிவித்தார்.






## பெற்றோர் அடிக்கடி சண்டை போட்டதால் குடிநீர் தொட்டியில் ஏறி தற்கொலைக்கு முயன்ற மாணவி : போலீஸ், தீயணைப்பு துறை மீட்டனர்

நாகர்கோவில், டிச.22-
கோட்டார் காவல் நிலையத்துக்கு உட்பட்ட வல்ல ன்குமரன் விளை பகுதியில் குடிநீர் தொட்டி ஒன்று உள் ளது. இந்த குடிநீர் தொட்டி மீது நேற்று முன்தினம் இரவு 9 மணி அளவில் 16 வயது மதிக்கத்தக்க பிளஸ்2 மாணவி ஏறினார். இருட்டாக இருந்ததால் இதை முதலில் யாரும் கவனிக்கவில்லை. மாணவி தொட்டி மீது ஏறி நின்று நான் சாகப் போறேன் என கூறிய பின்னரே அந்த பகுதி பொதுமக்கள் கவனித்தனர்.

உடனடியாக இது குறித்து கோட்டாறு காவல் நிலை யத்திற்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவம் அறிந் ததும் கோட்டார் போலீசார் சென்று பேச்சுவார்த்தை நடத்தினர். அப்போது பெற்றோர் அடிக்கடி தகராறு செய்கிறார்கள். என்னால் படிக்க முடியவில்லை. நான் சொல்வதை கேட்பதில்லை என என கூறியுள்ளார். உடனே போலீசார் தனது பெற்றோர் இனி தகராறு செய்ய மாட்டார்கள் அப்படி தகராறு செய்தால் போலீ ஸிற்கு தகவல் தெரிவிக்கலாம் எனவும் அவர்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என்றனர்.

இந்த தகவல் அறிந்து மாணவியின் பெற்றோரும் வந்து தகராறு செய்ய மாட்டோம் உன்னை திட்டமாட் டோம் என்றனர். ஆனால் முதலில் மாணவி முதலில் இறங்க மறுத்தார். இதை அடுத்து தீயணைப்பு துறைக்கு தகவல் தெரிவித்தனர். தீயணைப்புத்துறையினர் சம்பவ இடத்திற்கு சென்று மாணவியை பத்திரமாக இறக்குவத ற்கான நடவடிக்கையில் இறங்கினர். பின்னர் போலீசார் சமரசத்தை ஏற்று மாணவி கீழே இறங்கினார். அவருக்கு அறிவுரை கூறிய போலீசார் மாணவியை பெற்றோருடன் அனுப்பி வைத்தனர். இந்த சம்பவத்தால் இரவு அந்த பகுதியில் பெரும் பரபரப்பு ஏற்பட்டது.

## தென்னைமர மூட்டு பகுதியில் முளைக்கும் தென்னை கன்று அதிசயமாக பார்க்கும் மக்கள்



களியக் காவிளை, டிச, 22 -
களியக் காவிளை அருகே மேக்கோட்டில் தனியார் மருத்து வமனை ஒன்று செயல்பட்டு வருகிறது. இந்த மருத்துவமனை வளாகத்தில் தென்னந்தோப்பு உள்ளது. இந்த தென்னந்தோ ப்பில் தென்னை மரக் கன்றுகள் நடவு செய்யப்ப ட்டுள்ளது. தென் னங்கன்றுகள் நடவு செய்து சுமார் ஐந்து வருடங்கள் ஆகியுள்ளது.

இந்த நிலையில் ஒரு தென்னை மரத்தின் மூட்டு பகு தியில் இருந்து வாழை மரங்களுக்கு கன்று முளைப்பது போல தென்னங்கன்று முளைத்து வளர்ந்து வருகிறது.

சாதாரணமாக வாழை மரத்திலிருந்து மரத்தின் மூட் டில் இருந்து வாழைக்கன்றுகள் முளைப்பது வழக்கம். தென்னை மர மூட்டில் இருந்து தென்னை கன்றுகள் முளைப்பதில்லை. இயற்கைக்கு மாறாக தென்னை மூட்டு பகுதியில் இருந்து தென்னை கன்று முளைத்த சம்பவம் அப்பகுதியில் காட்டுதீ போல் பரவியது. இது இயற்கை விவசாயத்தில் நிகழ்ந்த ஒரு சாதனை ஆகும். இந்த அற்புத தென்னை மரக்கன்றினை அப்பகுதியினர் பார்த்து வியந்து மகிழ்ச்சியில் உள்ளனர்.

## முட்டைகளில் புற்றுநோய் அபாயம் இல்லை

புதுடெல்லி, டிச.22-
முட்டைகளில் புற்றுநோய் அபாயம் இல்லை என்று -இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரக் கட்டுப்பாட்டு ஆணையம் (எஃப்எஸ்எஸ்ஏஐ) விளக்கம் அளித்து ள்ளது.

இந்தியாவில் விற்கப்படும் முட்டைகள்,' மக்கள் சாப்பிட முற்றிலும் உகந்தவை; அவற்றில் புற்றுநோயை உருவாக்கும் ஆன்ட்டிபயாடிக் மருந்துகளின் கூறுகள் இருப்பதாக பரவும் தகவல் அறிவியல்பூர்வ ஆதா ரமற்றது; மக்களைத் தவறாக வழிநடத்தக் கூடியது என்றும் இந்திய உணவு பாதுகாப்பு மற்றும் தரக் கட் டுப்பாட்டு ஆணையம் (எஃப்எஸ்எஸ்ஏஐ) விளக்கம் அளித்துள்ளது.

## ராமேஸ்வரத்தில் நாம் தமிழர் கட்சியினர் ஓஎன்ஜிசி திட்டத்தை எதிர்த்து நடை பயணம் மேற்கொண்ட போது கைது




இராமேஸ்வரம். டிச: 22-
இராமநாதபுரம் மாவட்டத்தில் ஓஎன்ஜிசி மூலம் ஆழ் துளைக் கிணறுகள் தோன்றி எரிவாய் எடுப்பதை கண்டித் தும் மாவட்டத்தை விட்டு வெளியேற்ற கோரியும் நாம் தமிழர் கட்சியின் ஒருங்கி ணைப்பாளர். இளங் கோ தலைமையில் ராமேஸ்வரம் முதல் தங்கச்சிமடம் வரை விழிப்புணர்வு நடைப யணம் மேற்கொண்ட போது காவல்துறை யினர் தடுத்து நிறுத்தி கைது செய்தனர்.

## கிள்ளியூர் சட்டமன்ற தொகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட்டியிட வழக்கறிஞர் விருப்ப மனு




நாகர்கோவில், டிச. 22-
2026 சட்டமன்றத் தேர்தலில் கன்னி யாகுமரி மாவட்டம் கிள்ளியூர் சட்டமன்ற தொகுதியில் காங்கிரஸ் கட்சி சார்பில் போட் டியிட அகில இந்திய பணியாளர் காங்கிரஸ் தலைவர் வழக்கறிஞர் பா. ஆல்பின் மனோ சென்னை சத்தியமூர்த்தி பவனில் விருப்ப மனு தாக்கல் செய்தார்.

### 100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்ப பெற வலியுறுத்தி

## தஞ்சாவூர் மாவட்டத்தில் 15 இடங்களில் 24 ஆம் தேதி ஆர்ப்பாட்டம் திமுக கூட்டணி கட்சிகள் பங்கேற்ற கூட்டத்தில் முடிவு



தஞ்சாவூர் டிசம்பர் 22-
100 நாள் வேலை திட்டத்தை ஒழிக்கும் சட்டத்தை திரும்ப பெற வலியுறுத்தி தஞ்சா வூர் மத்திய மாவட்டத்தில் 15 இடங்களில் ஆர்ப்பாட்டம் நடத்துவது என்று திமுக மற்றும் கூட்டணி கட்சிகள் ஆலோசனை கூட்டத்தில் முடிவு செய்யப்பட்டது

தஞ்சாவூர் மத்திய மாவட்டத்தில் திமுக அலுவலகமான கலைஞர் அறிவாலயத்தில் கூட்டத்திற்கு திமுக செயலாளர் துரை. சந் திர சேகரன் எம்எல்ஏ தலைமை தாங்கினார் .முரசொலி எம்பி தலைமை செயற்குழு உறுப்பினர்கள் து செல்வம், டி கே ஜி நிலை மேகம் எம்எல்ஏ ,மேயர் சண் ராமநாதன் ஆகியோர் முன்னிலை வகித்தனர்

கூட்டத்தில் மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதி யளிப்பு சட்டத்தை திரும்பப் பெற வலியுறுத்தியும், சட்டத்தை கொண்டு வந்த மத்திய அரசையும், அதற்கு துணை போகும் அதிமுக வையும் கண்டி த்து தஞ்சாவூர் மத்திய மாவட்டத்தில் 15 இடங்களி ல் ஆர்ப்பாட்டம் நடத்துவது இந்த ஆர்ப்பாட்டத்தில் திமுக மற்றும் கூட்டணி கட்சி நிர்வாகிகள் தொண்டர்கள் திரளாக கலந்து கொள்வது என முடிவு செய்யப்ப ட்டது

கூட்டத்தில் காங்கிரஸ் கட்சி மாநகர மாவட்ட தலைவர் பிஜி ராஜேந்திரன் ,மதி முக மாவட்ட செயலாளர் தமிழ்ச்செல்வன், விடுதலை சிறுத்தைகள் கட்சி மாவட்ட செயலாளர் ஜெய்சங்கர், மார்க்சிஸ்ட் கம் யூனிஸ்டு கட்சி செயற்குழு உறுப்பினர் செந்தில் குமார் ,இந்திய கம்யூனிஸ்ட் மாநகர செயலாளர் முத்துக்குமரன், இந் திய யூனியன் முஸ்லிம் லீக் மாவட்ட செய லாளர் ஜெய்னுலாபுதீன் மற்றும் கூட்டணி கட்சி சேர்ந்த நிர்வாகிகள் திரளாக கலந்து கொண்டனர்

## தோவாளையில் மாற்றுத் திறனாளிகள் தினவிழா: நலத்திட்ட உதவி வழங்கிய தளவாய் சுந்தரம் எம்.எல்.ஏ



ஆரல்வாய்மொழி, டிச. 22-
கன்னியாகுமரி மாவட்ட தோவாளை ஒன்றிய சக்ஷத்தின் சார்பாக சர்வதேச மாற் றுத்திறனாளிகள் தினவிழா தோவாளையில் வைத்து நடைபெற்றது.

தொடக்க நிகழ்வாக திருவிளக்கேற் றுதல் நிகழ்ச்சி நடைபெற்றது. இந்நிகழ்ச் சிக்கு சக்ஷம் தோவாளை ஒன்றிய தலை வர் ராஜேஷ் தலைமை வகித்தார். சக்ஷம் தோவாளை ஒன்றிய அமைப்பாளர் மாரி யப்பன், பெண்கள் அணி பொறுப்பாளர் ராஜகுமாரி, துணை தலைவர் மாடசாமி ஆகியோர் முன்னிலை வகித்தனர். சுரேஷ் வரவேற்புரை வழங்கினார். தோவாளை ஒன்றிய செயலாளர் சங்கர், மற்றும் பொரு ளாளர் விஜயா ஆகியோர் அறிக்கை வாசி த்தார். இந்நிகழ்ச்சியில் சிறப்பு விருந்தின ராக தளவாய்சுந்தரம் எம் எல் ஏ கலந்து கொண்டு மாற்றுத்திறனாளிகளுக்கு நலதி ட்ட உதவிகள் வழங்கி அன்னதான நிகழச் சியினையும் தொடங்கி வைத்தார்.

இந்நிகழ்ச்சியில் ஆரல்வாய்மொழி பேரூராட்சி மன்ற தலைவர் முத்துக்குமார் மற்றும் முன்னாள் தோவாளை ஊராட்சி ஒன்றிய தலைவர் சாந்தினி பகவதியப்பன், மற்றும் தமிழ்நாடு பனைமரம் காக்கும் பாது காப்பு இயக்கத்தின் நிறுவனத் தலைவர் பிரதின்ஜீன், மருத்துவர் உமா பால கணே ஷ்குமார் ஆகியோர் கலந்து கொண்டு வாழ் த்துரை வழங்கினார்கள்.

## அகில இந்திய மூவேந்தர் முன்னணி கழகத்தின் சிறப்பு மாநில பொதுக்குழு கூட்டம்!



திருப்பூர், டிசம்பர்.22-
அகில இந்திய மூவேந்தர் முன்னணி கழகத்தின் சிறப்பு மாநில பொதுக்குழு கூட்டம் திருப்பூர் வெள்ளையங்காடு அருகே உள்ள சிவாளா மஹாலில் மாநில பொதுச் செயலாளர் வீ,டி பாண்டியன் தலைமையில் மாநில பொருளாளர் மணி வேல் முன்னிலையில் நடைபெற்றது.

இதில் நிறுவனர் தலைவர் டாக்டர் ந. சேதுராமன் அவர்கள் கலந்து கொண்டு சிறப்புரை ஆற்றினார் மேலும் அடுத்த ஆண்டு நடைபெறுகின்ற சட்டமன்றத் தேர்தலில் கூட்டணி குறித்தும் ஆலோசிக்க ப்பட்டது மேலும் அகில இந்திய மூவேந்தர் முன்னணி கழகத்தின் சார்பில் வெற்றி பெறும் கூட்டணியில் ஆதரவு தெரிவித்து களப்பணியாற்றி நிச்சயமாக கழகத்தின் சார்பில் வேட்பாளர்களை நிறுத்தி வெற்றி பெற்று மக்களுக்கு செய்யும் சேவையை மேலும் அதிகமாக செய்ய இருப்பதாக தெரிவித்தார் இந்த நிகழ்வில் மாநில நிர்வா கிகள் மாவட்ட நிர்வாகிகள் சிறப்பு பொது க்குழு உறுப்பினர்கள் 500க்கும் மேற்பட்ட பெரும் திரளாக பங்கேற்றனர் பங்கேற்ற அனைவருக்கும் அறுசுவை உணவு வழங் கப்பட்டது

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001. Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.